*பத்தாம் வகுப்பு மார்ச் – 2019*

*சமூக அறிவியல் - Key Answer*

மதிப்பெண்கள்: 100

பகுதி – I

| I. | சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. | | |
|---|---|---|---|
| 1. | (அ) தொழில் புரட்சி | 8. | (அ) நீலகிரி மலை |
| 2. | (இ) மார்ன் நதிக்கரை | 9. | (ஆ) சமமான காலநிலை |
| 3. | (ஆ) முசோலினி | 10 | (ஆ) யுரேனியம் |
| 4. | (அ) தி ஹேக் | 11 | (ஆ) Tata Iron Steel Company |
| 5. | (ஈ) சர்தார் வல்லபாய் படேல் | 12 | (ஈ) பெங்களூரு, சென்னை, மும்பை |
| 6. | (ஈ) மியான்மர் | 13 | (இ) கேரளா |
| 7. | (இ) பொது நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெறுதல் | 14 | (அ) 1967 |

***பகுதி -II***

| 15. | ***பொருத்துக*** | | (2x5=10) |
|---|---|---|---|
| (i) | அ | பராக்பூர் | மங்கள் பாண்டே |
| | ஆ | நியூ இந்தியா | டாக்டர். அன்னிபெசன்ட் |
| | இ | சுபாஷ் சந்திர போஸ் | இந்திய தேசிய இராணுவம் |
| | ஈ | காமராஜர் | அரசை உருவாக்குபவர் |
| | உ | நீதிகட்சி | டி.எம். நாயர் |
| (ii) | அ | பிரம்மபுத்திரா | மானசரோவர் ஏரி |
| | ஆ | தலக்காற்று | நார்வெஸ்டர் |
| | இ | கரிசல் மண் | பருத்தி |
| | ஈ | மேற்கு வங்காளம் | சணல் |
| | உ | இந்தியாவின் சர்க்கரைக் கிண்ணம் | உத்திரபிரதேசம் |

***பிரிவு – II***

***குறிப்பு ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளி*** ***(10x2=20)***

(ii) பகுதி I ல் நான்கு வினாக்கள் II ல் ஒரு வினா III ல் நான்கு வினாக்கள் IV ல் ஒரு வினா தேர்வுசெய்க

**16.** ***காலனி ஆதிக்கம்:***

- காலனி ஆதிக்கம் என்பது குடியேற்றங்களை அந்நிய நாட்டில் ஏற்படுத்தி அதன் இயற்கை வளங்களை சுரண்டுதல்.
- இது உள்நாட்டு பெரும்பான்மையினருக்கும் அந்நிய சிறுபான்மையினருக்கும் ஏற்பட்ட நெருடலான உறவாகும்.

**17.** ***அமெரிக்கா முதல் உலகப் போரில் ஈடுபட காரணம்:***

- 1917 ம் ஆண்டு அமெரிக்கக் கொடிகளை ஏந்திய நான்கு வணிகக் கப்பல்களை ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல் மூழ்கடித்தன.
- இதில் நூற்றுக்கணக்கான அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர்.
- அமெரிக்கா ஜெர்மன் மீது போர் அறிவிப்பு செய்தது.



S.Geetha

| | |
|---|---|
| 18. | ***பீர் மண்டப புரட்சி:***<br>• 1923 ம் ஆண்டு அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் இடுபட்டு, பீர் மண்டபப் புரட்சியில் ஈடுபட்டார்<br>• தேசத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டு, ஐந்து ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார்.<br>• சிறையில் நாசிசத்தின் வேத நூலான ‘மெயின் காம்ப்’ என்ற நூலை எழுதினார். |
| 19. | ***இரண்டாம் உலகப் போருக்கான உடனடிக் காரணம்:***<br>• ஹிட்லர் போலந்து வழியாக இராணுவச் சாலை அமைக்கும் உரிமையை வழங்குமாறு போலந்தை நிர்ப்பந்தித்தார்.<br>• டான்சிக் துறைமுகத்தைத் தன்னிடம் ஒப்படைக்கவும் வலியுறுத்தினார்.<br>• போலந்து மறுக்கவே ஹிட்லர் போலந்து மீது மின்னல் வேக தாக்குதல் நடத்தினார். |
| 20. | ***அறிக்கை 21:***<br>1992 -ல் ரியோ-டி-ஜெனிரோவில் ஐ.நா.வின் சுற்றுச்சூழல் மேம்பாட்டு மாநாட்டில் ‘அறிக்கை 21’ என்ற கோட்பாட்டினை அனைத்து நாடுகளும் ஏற்று இயற்கைச் சூழலை பாதுகாத்து, பொருளாதார மேம்பாடடைய உறுதி கொண்டுள்ளது. |
| 21 | **இடம் - தலைவர்கள்**<br>டெல்லி - இரண்டாம் பகதூர்ஷா<br>மத்திய இந்தியா - ஜான்சி இராணி இலட்சுமிபாய்<br>லக்னோ - பேகம் ஹஸ்ரத் மஹால்<br>கான்பூர் - நானாசாகிப், தாந்தியாதோப் |
| 22 | ***சுத்தி இயக்கம்:***<br>• சுத்தி இயக்கத்தை தோற்றிவித்தவர் சுவாமி விவேகாநந்தர்<br>• மதம் மாறிய இந்துக்களை மீண்டும் இந்து சமயத்தில் சேர்ப்பதற்காக இவ்வியக்கத்தை தொடங்கினார் |
| 23 | ***ரௌலட் சட்டம்:***<br>• ஆங்கில அரசு இந்திய சுதந்திரப் போராட்டத்தை தீவிரமாக எதிர்கொள்ள 1919 ஆம் ஆண்டு ரௌலட் சட்டத்தைக் கொண்டு வந்தது.<br>• இச்சட்டம் உத்தரவின்றி எவரையும் கைது செய்யவும் விசாரணையின்றி சிறையில் அடைக்கவும் ஆங்கில அரசுக்கு அதிகாரம் வழங்கியது. |

## ***பகுதி – II***

| | |
|---|---|
| 24. | ***உலக அமைதியின் அவசியம்:***<br>• உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி உலக அமைதி மூலம் மட்டுமே அடைய முடியும்.<br>• உலக அமைதி இந்திய பொருளாதாரவளர்ச்சிக்கு மட்டுமன்றி, வளரும் நாடுகளின் வளர்ச்சிக்கும் அவசியமானது. |
| 25 | ***தேசிய கட்சிகள்:***<br>இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு, நாடாளுமன்ற தேர்தலில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 6% வாக்குகளைப் பெறும் கட்சிகள் தேசிய கட்சிகள்<br>• எ.கா. காங்கிரஸ், பா.ஜா.க. |

## ***பகுதி – II***

| | |
|---|---|
| 26 | ***இமயமலைகளின் முக்கியத்துவம்:***<br>• உலகிலேயே மிக உயர்ந்த மலைகள், பனி உறைவிடம் என அழைக்கப்படுகிறது.<br>• இந்தியாவின் இயற்கை எல்லையாக உள்ளதால் அன்னிய படையெடுப்பை தடுக்கிறது. |

| | |
|---|---|
| | • மேற்கு இமயமலைகள், மத்திய இமயமலைகள், கிழக்கு இமயமலைகள் என மூன்று உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. |
| 27 | ***இந்தியக் காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகள்:***<br>• அட்சங்கள்<br>• உயரம்<br>• கடலிலிருந்து தூரம்<br>• காற்று<br>• மலைகளின் அமைவு |
| 28 | ***இயற்கை தாவரம்:***<br>• இயற்கை தாவரம் என்பது புவியின் மேற்பரப்பில் இயற்கையாகவே வளரும் தாவரங்களின் தொகுப்பு ஆகும்.<br>• இவை காலநிலை, மண் மற்றும் உயிரினங்களின் செல்வாக்கினால் உருவாகுபவை. |
| 29 | இந்திய வேளாண்மையில் ஒரு ஆண்டில் மூன்று பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. |

| பெயர் | விதைக்கும் பருவம் | அறுவடைக்காலம் |
|---|---|---|
| காரி∴ப் | ஜுன் (பருவமழை தொடங்கும் காலம்) | நவம்பர் மாத தொடக்கம் |
| ராபி பயிர்கள் | நவம்பர் (குளிர் காலத் துவக்கம்) | மார்ச் (கோடை ஆரம்பம்) |
| சையத் பயிர்கள் | மார்ச் (கோடை துவக்கம்) | ஜுன் (பருவ மழை ஆரம்பம்) |

| | |
|---|---|
| 30 | ***மென்பொருள் மையங்கள்:***<br>• சேன்னை<br>• திருவனந்தபுரம்<br>• பெங்களூரு<br>• மும்பை<br>• பூனா<br>• நொய்டா<br>• கொல்கத்தா<br>• இந்தூர் |
| 31 | **மின்னியல் கழிவு:**<br>• தொலைக்காட்சிப் பெட்டிகள், கைபேசி, கணினி, குளிர்சாதனப் பெட்டி, அச்சு இயந்திரங்கள் போன்றவைகளால் மின்னியல் கழிவு ஏற்படுகிறது.<br>• இந்தியாவில் 3,80,000 டன் மின்னியல் கழிவு உற்பத்தியாகின்றன. |
| 32 | • வணிகம் என்பது சேவைகளை வாங்கும், விற்கும் அல்லது பண்டமாற்றம் செய்யும் செயல் முறையாகும்.<br>• வணிகம் இரு வகைப்படும் அவை: உள்நாட்டு வணிகம், பன்னாட்டு வணிகம் |
| 33 | தொலை நுண்ணுணர்வுத் தொகுதி நான்கு பகுதிகளைக் கொண்டது.<br>• இலக்கு<br>• ஆற்றல் மூலம்<br>• பிரதிபலிக்கும் வழி மற்றும்<br>• உணர்வி |

## *பகுதி – IV*

| | |
|---|---|
| 34 | ***பணிகள் துறை:***<br>பணிகள் துறை என்பது செய்தி, தொலைத் தொடர்பு, போக்குவரத்து, வணிகம், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள். |

| 35 | ***கலப்பு பொருளாதாரம்:*** <br>• பொதுத்துறையும் தனியார் துறையும் ஒருங்கிணைந்து செயல்படுவது கலப்பு பொருளாதாரம். |
|---|---|

*பகுதி - III*

ஏதேனும் **நான்கினை** வேறுபடுத்திக் காட்டுக (4x2=8)

| 36. | **கிரீன்விச் தீர்க்க நேரம்** | **இந்திய திட்டநேரம்** |
|---|---|---|
| | • லண்டன் நகரின் வழியாக செல்லும் கிரீன்விச் 0° தீர்க்க கோட்டிலிருந்து கணக்கிடப்படுகிறது | • இந்தியாவின் நடுவே நகரின் வழியாக செல்லும் 82°30’ கிழக்கு தீர்க்க கோட்டிலிருந்து கணக்கடப்படுகிறது. |
| | • உலக நாடுகள் அனைத்திற்கும் பொதுவான நேரம் | • இந்தியா முழுமைக்கும் பொதுவான நேரம் கிரீன்விச் 0° தீர்க்கநேரத்தை விட 5.30 மணிக்கு முன்னதாக உள்ளது. |

| | | |
|---|---|---|
| | • கோடைக் காலத்தில் பகல் நேரத்தில் வீசும் வலிமையான வெப்பகாற்று லூ | • வடகிழக்கு இந்திய பகுதிகளில் வீசும் தலக்காற்று நார்வெஸ்டர் என அழைக்கப்படுகிறது. |
| | • இந்தியாவின் வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதிகளில் வீசுகிறது. | • இத்தலக்காற்று பஞ்சாப்பில் கால்பைசாகி என அழைக்கப்படுகிறது. |

| 38. | **புதுப்பிக்க கூடியவளம்** | **புதுப்பிக்க இயலாதவளம்** |
|---|---|---|
| | • மீண்டும் மீண்டும் எளிதாக உற்பத்தி செய்யக்கூடிய வளங்களை புதுப்பிக்கத்தக்க வளங்கள் என்கிறோம | • பயன்பாட்டிற்குப் பிறகு மீண்டும் எளிதில கிடைக்க இயலாத வளங்களை புதுப்பிக்க இயலாத வளங்கள் என்கிறோம் |
| | • **(எ.கா.)** சூரிய ஒளி, காற்று, தண்ணீர். | • **(எ.கா.)** நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு |

| 39. | **தன்னிறைவு வேளாண்மை** | **வணிக வேளாண்மை** |
|---|---|---|
| | • அதிக இடம் பெற்றுள்ள வேளாண்மை வகை | • தேவை அதிகமாகவுள்ள பயிர்களை விளைவிக்கும் வேளாண்மை |
| | • உற்பத்தியில் பாதியளவு குடும்பத் தேவையை நிறைவு செய்கிறது. மீதி சந்தைகளில் விற்கப்படுகிறது. | • அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு அந்நிய செலவாணியை ஈட்டித் தருகிறது. |
| | • நெல் மற்றும் கோதுமை அதிகமாக விளைவிக்கிறது. | • தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருளான தானியங்கள், பருத்தி, கரும்பு, சணல் போன்றவை விளைவிக்கின்றனர். |
| | • தீவிர வேளாண்மை என்கிறோம் | • பரந்த வேளாண்மை என்கிறோம். |

| 40. | **இரும்பு எ∴கு தொழிலகம்** | **மொன்பொருள் தொழிலகம்** |
|---|---|---|
| | • நிலக்கரி சுரங்கங்களுக்கு அருகில் அமைந்துள்ளது | • இந்திய பொருளாதாரத்தில் முக்கிய தொழிலாக வளர்ந்து வருகிறது, |

| | |
|---|---|
| • இரும்புதாது வெட்டி எடுக்கப்படும் இடங்களுக்கு அருகில் அமைங்துள்ளது. | • பல்வேறு பகுதியில் மின்னியல் பூங்காக்களை நிறுவி வருகிறது. |
| • பெரும்பாலான இரும்பு எ.்.கு தொழிலகங்கள் சோட்டாநாகபுரி பீடபூமி பகுதியில் அமைந்துள்ளது | • 500 மேற்பட்ட மென்பொருள் நிறுவனங்கள் நம்நாட்டில் உள்ளன. |

.

| 41 | காற்று மாசடைதல் | ஒலி மாசடைதல் |
|---|---|---|
| | • காற்றிலுள்ள மாசுக்கள் இயற்கையாலும், மனிதர்களாலும் உண்டாக்கப்படுகின்றன. | • மனிதர்கள் அல்லது இயந்திரங்களினால் ஏற்படும் ஒலி செயல்பாடுகளுக்கு இடையூராக உள்ளது. |
| | • எரிமலை வெடிப்பு, காற்றரிப்பு, மகரந்தப் பரவல் ஆகியவை இயற்கையால் காற்று மாசடைதல். | • மனிதர்கள் மற்றும் விலங்குகளின் சமநிலையை பாதிக்கிறது. |
| | • வாகனங்கள், அணுமின் நிலையங்கள் தொழிற்சாலைகளில் இருந்து வரும் புகைகள் மனிதர்களால் ஏற்படுத்தப் படுகிறது | • கேட்கும் திறன் குறைதல் மற்றும் அதிக மன அழுத்தம் போன்ற தீமைகளை ஏற்படுத்துகிறது. |

| 42 | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|
| | • ஏற்றுமதி என்பது நம்நாட்டின் உபரி பொருட்களையும், சேவைகளையும் வெளிநாட்டிற்கு விற்பதாகும். | • இறக்குமதி என்பது நமக்கு தேவையான பொருட்களையும், சேவைகளையும் வெளிநாட்டிலிருந்து வாங்குவதாகும். |
| | • இந்தியா 7500 விதமன பொருட்களை 190 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது, | • இந்தியா 6000 விதமான பொருட்களை 140 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது |
| | • ஏற்றுமதி செய்வதினால் நாம் நமது அந்நிய செலவாணியை பெறுகிறோம் | • இறக்குமதி செய்வதினால் நாம் நமது அந்நிய செலவாணியை இழக்கிறோம். |

| 43. | சாலைவழி | இரயில்வழி |
|---|---|---|
| | • சாலைப் போக்குவரத்து செலவு மிக்க, திறனுடைய மிகச்சிறந்த போக்குவரத்து வழியாகும். | • பயணி மற்றும் சரக்குகளை ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லும் போக்குவரத்து சாதனம |
| | • நாட்டின் பல்வேறு பகுதிகளை அதிக சாலைகளால் ஒன்றிணைக்கிறது. | • நாட்டின் தொலைவில் உள்ள மக்களை இணைக்கிறது. |
| | • சாலை போக்குவரத்தில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. | • இந்திய இரயில்வே உலகில் இரண்டாவது இடத்தில் உள்ளது |

## *பிரிவு – IV*

**குறிப்பு**: கீழ்கண்ட தலைப்புகளில் ஏதேனும் இரண்டினைத் தேர்ந்தெடுத்து அவற்றின் அனைத்து வினாக்களுக்கும் விடையளி (2x4=8)

| 44. | **ஜெர்மனியின் பேராசை** | |
|---|---|---|
| | (அ) | இரண்டாம் கெய்சர் வில்லியம் முதல் உலகப் போரின் போது ஜெர்மனியின் அரசர். |

| | | |
|---|---|---|
| | (ஆ) | 'உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் திறமை ஜெர்மனிக்கு மட்டுமே உள்ளது' என்று நம்பினார் |
| | (இ) | ஆங்கிலேயர்களின் பேரரசில் சூரியன் மறைவதேயில்லை என்பதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. |
| | (ஈ) | 'ஹேலிகோலாண்ட' |
| 45 | **மத்திய இந்தியாவில் பெரும் புரட்சி** | |
| | அ | ஜான்சிராணி மற்றும் தாந்தியாதோப் |
| | ஆ | குவாலியர் இராணி இலட்சுமிபாய் -யால் கைப்பற்றப்பட்டது. |
| | இ | 1857 ஆம் ஆண்டு போரில் கொல்லப்பட்டார். |
| | ஈ | தாந்தியா தோப் **கைது செய்யப்பட்டு, கொல்லப்பட்டார்.** |
| 46 | **ஆரிய சமாஜ்** | |
| | (அ) | சுவாமி தயானந்த சரஸ்வதி |
| | (ஆ) | "வேதங்களை நோக்கி செல் என்பது இவரின் குறிக்கோள் |
| | (இ) | இந்து சமயத்தின் மார்டின்லூதர் என அழைக்கப்பட்டார் |
| | (ஈ) | முக்கிய சீடர்களான லாலாலஜபதிராய், லாலா ஹன்ஸ்ராஜ், பண்டித குருதத் ஆரிய சமாஜ் கொள்கைகளைப் பரப்பினர். |
| 47. | **மத்திய இந்தியாவில் புரட்சி** | |
| | அ | **1885 ம் ஆண்டு** இந்திய தேசியகாங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது |
| | ஆ | மும்பையில் நடைப்பெற்றது. |
| | இ | **W.C.பானர்ஜி** தலைமையில் நடைபெற்றது. |
| | ஈ | 72 பிரதிநிகள் கலந்து கொண்டனர் |

*பிரிவு –V*

48. (அ)

**பிராங்க்ளின் டி.ருஸ்வெல்ட் செய்த சீர்திருத்தங்கள்:**

- பிராங்க்ளின் டி.ருஸ்வெல்ட் அறிவித்த நிவாரணம், புனரமைப்பு, மற்றும் சீர்திருத்தங்கள் அமெரிக்காவின் பொருளாதார மேன்மைக்கும் உற்பத்திப் பெருக்கத்தற்கும் உறுதியான அடித்தளம் அமைத்துக் கொடுத்தது

**புதிய பயனுரிமைக் கொள்கை:**

- பொருளாதார பெரும் தாழ்வை முடிவுக்கு கொண்டு வர எப்.டி.ருஸ்வெல்ட் புதிய பயனுரிமை என்ற புதிய சீரமைப்புக் கொள்கையை உருவாக்கினார்.
- உதவி, மீட்பு, சீர்திருத்தம் என்ற மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**டென்னசி பள்ளதாக்கு திட்டம்:**

- டென்னசி பள்ளத்தாக்கு திட்டம் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் இயற்கை வளத்தைக் கொண்டு தொழில் மற்றும் விவசாயத்தை ஊக்குவிப்பது.
- அணை கட்டுதல், வெள்ளத்தடுப்பு, மின் உற்பத்தி செய்தல், வனவளம், மண் வளம் போன்றவை மேம்படுத்தப்பட்டன.

**கூட்டாட்சி அவசர நிவாரண நிர்வாகம்:**

- ஐநூறு மில்லியன் டாலர்கள் மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியாக வழங்கப்பட்டது.

**கூட்டாட்சி ரிசர்வ் வங்கி:**

- கூட்டாட்சி ரிசர்வ் வங்கி மூலம் வங்கி நிறுவனங்களுக்கும் தொழிற் சாலைகளுக்கும் கடன் வழங்கப்பட்டது.

**பாதுகாப்பு பரிவர்த்தனைச் சட்டம்:**

| | |
|---|---|
| | • பாதுகாப்பு பரிவர்த்தனைச் சட்டம் மூலம் பங்குச் சந்தையில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கியது.<br>**தேசிய தொழில் மீட்புச்சட்டம்:**<br>• தேசிய தொழில் மீட்புச்சட்டம் தொழிற்சாலைகளில் சம்பள உயர்வு, பணிநேரக் குறைப்பு போன்ற சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது.<br>**வேளாண்மைப் பொருள் சீரமைப்புச் சட்டம்:**<br>• வேளாண்மைப் பொருள் சீரமைப்புச் சட்டம் மூலம் அரசு விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கியது.<br>• இம்மானியம் அவர்கள் உற்பத்தி செய்யும் தானியத்தின் அளவைக் குறைத்து, விலை உயர்வுக்கு வழிவகுத்தது.<br>• '**பயனுரிமைத் திட்டம்**' உலக நாடுகளின் சீர்தருத்தங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது. |
| (ஆ) | **ஐ.நா.வின் முக்கியமான சாதனைகள்:**<br>• உலக அமைதிக்காக பாடுபடுகின்ற ஐ.நா. பல சாதனைகளை செய்துள்ளது.<br>• பல்வேறு பன்னாட்டு பிரச்சனைகளுக்கு ஐ.நா.சபை அமைதியான பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு கண்டு வருகிறது.<br>• அரசியல் பிரசனைகளுக்கு பாதுகாப்பு மன்றம் மூலமும், சட்டப்பிரச்சனைகளுக்கு பன்னாட்டு நீதிமன்றம் மூலமும், பிற பிரச்சனைகளுக்கு சிறப்பு அமைப்பு மூலமும் தீர்வு காண்கிறது.<br>• இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம், ஈரான் மற்றும் ஈராக் சிக்கல்களை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது<br>• 1963 ஆம் ஆண்டு அணு சோதனை தடைச் சட்டத்தையும், 1996ஆம், ஆண்டு தொடர் அணு சோதனை தடைச் சட்டத்தையும் நிறைவேறச் செய்தது.<br>• 1992 -ல் ரியோ-டி-ஜெனிரோவில் ஐ.நா.வின் சுற்றுச்சூழல் மேம்பாட்டு மாநாட்டில் 'அறிக்கை 21' என்ற கோட்பாட்டினை அனைத்து நாடுகளும் ஏற்று இயற்கைச் சூழலை பாதுகாத்து, பொருளாதார மேம்பாடடைய உறுதி கொண்டுள்ளது.<br>• ஐ.நா. தனது அமைதிப் படையை எகிப்துக்கு அனுப்பி சூயஸ் கால்வாய் சிக்கலை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.<br>• பெண்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான நிகழ்வுகளையும் செயல்பாடுகளையும் ஊக்குவிக்கின்றன.<br>• 1995ம் ஆண்டு ஐ.நா.சபை தனது சேவையில் 50வது ஆண்டு பொன்விழாவை கொண்டாடியது.<br>• விழாவின் கருத்தாக 'ஐ.நா. சபையின் மக்களாகிய நாம், நல்லதொரு உலகத்திற்காக ஒன்று கூடுவோம்' என எடுத்துரைக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 49.<br>(அ) | ***பஞ்ச சீலம் மற்றும் அணிசேராக் கொள்கை:***<br>உலக நாடுகளிடையே அமைதி, பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியா பஞ்சசீலம் மற்றும் அணிசேராக் கொள்கையை கடைபிடித்து வருகிறது.<br>***பஞ்சசீலக் கொள்கை:***<br>இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு 1955ல் பாண்டுங் மாநாட்டில் அமைதிக்காக 5 அம்சக் கொள்கையினை வெளியிட்டார் அவை 'பஞ்சசீலம்' என அழைக்கப்படுகிறது.<br>• ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையை மதிக்க வேண்டும்.<br>• எந்த ஒரு நாடும் பிற நாட்டை தாக்கக் கூடாது.<br>• ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில், பிற நாடுகள் தலையிடக்கூடாது. |



S.Geetha

| | |
|---|---|
| | • அனைத்து நாடுகளும் சமத்துவம் மற்றும் பரஸ்பர நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.<br>• ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கியிருத்தல் வேண்டும்.<br>இப்பஞ்சசீலக் கொள்கை உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை மேலும் உயர்த்துகிறது.<br><br>***அணிசேராக் கொள்கை:***<br>• இரண்டாம் உலகப்போருக்குப் பின் உலக நாடுகள் இரு பகைமை அணிகளாக பிரிந்தன.<br>• அமெரிக்காவின் தலைமையில் ஒரு அணியும், ரஷ்யாவின் தலைமையில் ஒரு அணியும் உருவாகின.<br>• இதனால் உலகில் பதற்ற நிலை மற்றும் அமைதியின்மை ஏற்பட்டன.<br>• இந்த இரு அணிகளிலும் சேராமல் இந்தியா நடுநிலை நாடாக (அணி சேரா நாடாக) விளங்கி வருகிறது.<br>• இந்த இரு அணிகளுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றினால், இந்தியா அவற்றை தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு, உலகில் அமைதியை நிலைநாட்டி வருகிறது. |
| ஆ | **தேசிய ஒருமைப்பாடு**<br>• புவியியல் அமைப்பு, அவற்றை ஒட்டிய மக்களின் வாழ்க்கைமுறை, பலதரப்பட்ட பழக்கங்கள் சமய நம்பிக்கைகள் மொழி, உணவு, உடைகள் போன்றவற்றால் மக்கள் வேறுபடுகின்றன.<br>• நமது பழமையான வரலாறும், வளமையான கலாச்சாரமும் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கிறது.<br>• இந்தியாவின் பாரம்பரியத்தால் மக்கள் ஒன்று படுகின்றனர்.<br>• சகோதரத்துவம், நட்பு, அனைத்து மதத்தையும் சகித்துக்கொள்ளும் தன்மை போன்றவை நாம் ஒற்றுமைப்பாட்டுடன் வாழ வழிசெய்கிறது.<br>• அனைவரும் பாரத தாயின் பிள்ளைகள் என்ற எண்ணம் மற்றும் உணர்வால் தேசிய ஒருமைப்பாடு வளர்கிறது.<br>• இந்தியர் அனைவரும் சகோதர சகோதரிகள் என்ற எண்ணம் தேசிய ஒருமை பாட்டை வளர்க்கிறது.<br>• தேசிய சின்னங்கள், தேசியக்கொடி, மற்றும் தேசிய கீதம் போன்றவை தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கிறது.<br>• ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, பிரிந்தால் வீழ்ச்சி போன்ற உணர்வு தேசிய ஒருமைபாட்டிற்கு வழி வகுக்கிறது.<br>• இந்திய ஒற்றுமை சிந்து சமவெளி காலத்திலிருந்து இன்று வரை இந்திய கலாச்சாரத்தால் நிலை நாட்டப்பட்டு வருகிறது. |

| | |
|---|---|
| 50. (அ) | **வேற்றுமையில் ஒற்றுமை:**<br>• இந்தியா, தனித்துவம் மிக்க நில அமைப்புகளைக் கொண்டுள்ளது.<br>• மிக உயர்ந்த மலைச்சிகரமாக விளங்கும் K2 எனப்படும் காட்வின் ஆஸ்டின் வட இந்தியாவில் உள்ளது.<br>• மிகத் தாழ்வான மலபார் கடற்கரைச் சமவெளிகள் தென்னிந்தியாவில் காணப்படுகிறது.<br>• மிக அதிக மழைப் பெறும் பகுதியான சிரபுஞ்சி மேகாலயாவில் உள்ளது.<br>• மிக குறைந்த மழைப் பெறும் பகுதியான தார்பாலைவனம் இராஜஸ்தானில் |

| | |
|---|---|
| | உள்ளது.<br>• வடக்கே மித வெப்பமண்டல காலநிலையையும் தெற்கே வெப்பமண்டல காலநிலையையும் கொண்டுள்ளது.<br>• வெப்பமண்டலக் காடுகளும், மாங்குரோவ் மரங்கள் கொண்ட சுந்தரவனங்களும், பாலைவனப் புதர்களும் ஆங்காங்கே பரவிக் காணப்படுகின்றன.<br>• வேறுபட்ட இயற்கைச் சூழலைக் கொண்ட இந்தியாவில் பல்வேறு வகையான தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் காணப்படுகிறது.<br>• இந்தியாவில் மக்கள் இந்து,கிறிஸ்துவம், இஸ்லாமியம், சீக்கியம், புத்தம், ஜைனம் போன்ற மதங்களைப் பின்பற்றி வாழ்கின்றனர்.<br>• பல மொழிகள் பேசும் மற்றும் பல கலாச்சாரங்களை பின்பற்றி பண்பாடுகளுடன் வாழும் மக்களைக் கொண்ட இந்தியா ஓர் மத சார்பற்ற நாடு.<br>• நமது பழமையான வரலாறும், வளமையான இந்திய கலாச்சாரமும் வேறுபாடுகளை களைந்து மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கிறது.<br>• இந்தியா 'வேற்றுமையில் ஒற்றுமை நிறைந்த நாடு' என அறியப்படுகிறது. |
| (ஆ) | **மும்பை இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கக் காரணம்:**<br>மும்பையில் பருத்தி ஆலைகள் முன்னிலை வகிப்பதாலும், பருத்திஆலை அமைக்க சாதகமான சூழல் இருப்பதாலும் மும்பை இந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகிறது.<br>**காரணங்கள்:**<br>• நம் நாட்டில் பருத்தி ஆலைகள் 14 சதவீதம் உற்பத்தி பொருட்களையும் 35மில்லியன் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்குகிறது.<br>• மும்பையின் துறைமுக அமைவிடம் முடிக்கப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்ய ஏதுவாக உள்ளது.<br>• மும்பையில் பருத்தி விளையும் இடங்களுக்கும் ஆலைகளுக்கும் இடையில் தேவையான இரயில் மற்றும் சாலை போக்குவரத்து இணைப்பு உள்ளது.<br>• மும்பையின் ஈரப்பதம் நூலிழை தயாரிப்பிற்கு தேவையான காலநிலையை தருகிறது.<br>• மும்பையில் மூலதனப் பொருட்கள் மற்றும் நிதி வசதி எளிதில் கிடைக்கின்றன.<br>• மும்பையில் பணியாட்கள் ஏராளமாக கிடைக்கின்றன.<br>• உலகில் பருத்தியாடை உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா III ம் இடத்தில் உள்ளது.<br>• உலகின் பருத்தியாடை வணிகத்தில் இந்தியா II ம் இடத்தில் உள்ளது.<br>• இந்திய தொழிற்சாலைகளில் பருத்தி தொழில் முதல் இடத்தில் உள்ளது. |

| | |
|---|---|
| 51.(அ) | ***நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் முறைகள்:***<br>உற்பத்தி முறை:<br>• நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் ஒட்டு மொத்த மதிப்பை கொண்டு கணக்கிடப்படுகிறது.<br>வருமான முறை:<br>• நாட்டில் உள்ள அனைத்து மக்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கடப்படுகிறது.<br>செலவின முறை:<br>• மக்கள் நுகரும் பொருட்களுக்கான செலவு, முதலீடு, சேமிப்பு ஆகிய மூன்றின் அடிப்படையில் கணக்கடப்படுகிறது. |
| (ஆ) | **பசுமைப்புரட்சி:**<br>• 1967 ம் ஆண்டு இந்தியாவில் பசுமைபுரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.<br>• நிலச்சீர்திருத்தம், அதிக விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகள் மற்றும் |

பாசன வசதிகள் மூலமாக அறிமுகப்படுத்தியது.

- நில உச்சவரம்பு, இடைத்தரகர்களின் ஆதிக்கத்தை நீக்குதல் மற்றும் நிலக்குத்தகை போன்ற நிலச்சீர்திருத்த சட்டங்களை செயல்படுத்தியது.
- ஆச்சாரிய வினோபாவேயின் பூமிதான இயக்கத்தின் மூலமாக மில்லியன் ஏக்கர் நிலங்கள் தானமாக பெறப்பட்டு நிலமில்லா ஏழைகளுக்கு வழங்கப்பட்டது.
- அதிக விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகளைப் பயிரிட நீர்ப்பாசன வசதிகள், இரசாயன உரங்கள் பண ஆதாரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளும் மானிய விலையில் வழங்கப்பட்டன.
- பசுமைப்புரட்சியின் விளைவாக இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைந்தது.

(இ) **தமிழ்நாட்டின் மின்சக்தி திட்டங்கள்:**

**அனல்மின் உற்பத்தி**:
தமிழ்நாட்டில் எண்ணூர், தூத்துக்குடி, நெய்வேலி, மற்றும் மேட்டூரில் அனல்மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன.

**நீர்மின் உற்பத்தி:**
தமிழ்நாட்டில் மேட்டூர், குந்தா, பெரியார்அணை, கோதையாறு, பைக்காரா, சிங்காரா மற்றும் மாயாரில் அமைந்துள்ளன

**அணுமின் சக்தி உற்பத்தி:**
தமிழ்நாட்டில் அணுமின் சக்தி உற்பத்தி நிலையங்கள் கல்பாக்கம் மற்றும் கூடங்குளத்திலும் அமைந்துள்ளன.

**காற்று மின் சக்தி:**
மரபு சாரா மின் உற்பத்தியில் காற்று மின் சக்தி தமிழ்நாட்டில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. கோயம்புத்தூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் காற்றாலைகள் அமைந்துள்ளன

**உயிரி பொருட்கள் எரிசக்தி:**
உயிரி பொருட்கள் எரிசக்தியானது வேளாண் பொருட்களின் கழிவிலிருந்து பெறப்படுகிறது. இம்முறையில் தருமபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் மின் உற்பத்தி நடைபெறுகிறது.

***Wish you all the best***

*S.GEETHA. M.A., M.A., B.Ed.,*
*B.T.Assistant*
*Govt. Girls Higher Secondary School,*
*Manalmedu - Mayiladuthurai (Tk)*
*Nagappattinam (Dt)*
*Email: VKSJAYA44@gmail.com and*
*prakashvsk007@gmail.com*